T-UN-721

உ

சிவமயம்.

அரகூர்,

# திருமேனியம்மன்

## (பேரில் பாட்டு)

விசயதேவன் இயற்றியது.

தஞ்சை,

ஸரஸ்வதி மஹால் புத்தகாலயத்திலிருந்து

(காப்பி செய்யப்பட்டது.)

லாலி எலெக்டிரிக் அச்சுக்கூடம்,

கருணாநிதி மெடிக்கல் ஹால், தஞ்சாவூர்.

1926.

உ

## முகவுரை.

### பாப்பாநாடு அரசூர் திருமேனியம்மன் காதல்.

இந்தச் சுவடி தஞ்சாவூர் அரண்மனை ஸரஸ்வதி மஹாலில் இருப்பதாகச் சில காலத்துக்கு முன் அக்கழகத்தார் வெளியிட்ட தமிழ் காட்லாக் வால்யம் 2 பக்கம் 198 & 199 மூலமாய்த் தெரியவந்தது. அதன் மேல் அந்நூல் முற்றும் பார்க்க விரும்பி விண்ணப்பஞ் செய்து கொள்ளப் பிரதிக்காப்பி ஒன்று கிடைத்தது. அதிலும் எழுத்துகள் குறைந்தும் சிதைந்தும் இருந்தது அவைகளைச் சீர்படுத்தி ஒருவாறு அச்சிடவிரும்பி நான் கேட்டுக்கொண்டதின் பேரில் மகா-ா-ஸ்ரீ கோவிந்தசாமி முனிஷியார் அவர்களும் மகா-ா-ஸ்ரீ K. M. சிதம்பர ஐயரவர்களும் அதிக சிரமத்துடனும் பிரியத்துடனும் பார்த்து ஒழுங்கு செய்து தந்தமையால் இதை வெளியிடுதல் சாத்தியமாயிற்று. இதை இயற்றியவர் விசையதேவரென்று மாத்திரந் தானிருக்கிறது. ஆகையால் இதைச் செய்தவர் எங்கள் குடிப்பிறந்தாரொருவரென்று நன்கு விளங்குகிறது. இன்ன காலமென்பது செவ்வையாகத் தெரியவில்லை. ஆயினும் எட்டுச்சுவடிகள் ஸ்ரீ ராஜாஸரபோஜி காலத்திலும் அதற்கு முன்னருமே சேகரிக்கப்பட்டது. அவர்கள் காலம் 1799ஸு முதல் 1832ஸு வரையிலானதால் சுமார் 100 வருடங்களுக்கு முன்னதாக இருக்க வேண்டுமென்று ஊகிக்கப்படுகிறது. சிறந்த இலக்கிய நூலாக இல்லாவிடினும் ஏதோ பழைமையானதோர் சுவடி என்பதும் என்குலத்தோரால் செய்யப்பட்டதென்பதும் என் கிராம தேவதையைக் குறித்த நூலானதினாலும் இதை அச்சிட்டு வெளிப்படுத்தத் துணிந்தேன்.

பி. எஸ். ராஜப்பா,
பாப்பாநாடு

உ

# நூல்.

1. அரசூர் திருமேனியம்மனருள் கொண்ட
பரராசர் கப்பமிடும் பாம்பைவள நாடே.

2. கன்னலுடனேபல காவிப்பசுந்தேனுஞ்
செந்நெல் வயலே பெருகுந் தென்பாம்பை நன்னாடே

3. காவிலிருந்தகுயில் கூவியழைக்கவே
காமனுடன் வெள்ளைச் சோமன் முதலாக

4 வந்து பெருங்கூச்சலொடு வல்லமையைக் காட்டியிடப்
பந்தி பந்தியாய் நின்றோர் பாதம் பணிவோமே

5. மல்லாரிமும் முரசுமத்தளம் முழங்கவே
வில்லாளர் கூடிவிளையாடுந் தென்பாம்பை

6. பாம்பைவள நன்னாட்டுப் பலவிருது சொல்லியிடப்
பாவாணர் தம்முடைய பாட்டிலடங்காதே

7. கல்லூர் நெல்லூரைவென்ற காவலர்கள் கொண்டாட
வல்லரோவநுதினமும் வளர்பாம்பை நன்னாடே

8. கொடையாலுயர்ந்தவர்கள் கோலாகலமன்னர்
படையால் மிகுந்த தெங்கள் பாம்பைவள நன்னாடே

9. கும்பமுலைச்சியார் கொடிபோலிடைச்சியார்
நம்பிவரச்சொல்லி நான் மாட்டேனென்றாளே

10. காமவெறி கொண்டவந்தக் காமப்பயலுடன்
காணாமற் கூடிச்சண்டை கண்டாலேது செய்வன்

11. பேராசை வீணுமோ பெண்ணேபழிபோமோ
ஊராரறிந்தாலெனைப் பாராமலேசாரோ

12. ஆசை விளையாட்டோ காசுபணத்தட்டோ
ஆனாலுமுன்றன்மீதில் நானாசைகொண்டேனே

13. நானாசை கொண்டேனே நம்பியிருந்தேனே
மானேகளபமுலே மாமயிலேசேராயோ

14. சேராதிருந்தாலும் பாராதிருந்தாலும்
ஊராருமுங்கள் உறமுறையார்கேளாரோ

15. என்னுளையும் முடைய பொன்னாருங் கொங்கைமேல்
இந்நாள்வரையுங் கூடியிப்போவிடுவேனோ

16. இப்போவிடுவதில்லை யென்று பிடிக்கிறாய்
என்னைக்கொண்டகணவன் உன்னைவிடுவானோ

17. அரசுவடலிலே யகல்வரப்பில் வாழுகின்ற
அன்னமேயாசைதந்த மின்னாளைக்காணீரோ

18. மாஞ்சோலைக்குள்ளிருக்கு மாமயிலேதாராவே
மாமன்மகளையிங்கு வந்து போகச்சொல்லீரோ

19. வாளைகுதிபாயும் வாவிபுடைசூழப்
பாளைமணம் வீசும் பாம்பைவளநாடே

20. வீரதவண்டை மிகுமுரசுமல்லாரி
பாரவிருதுபெறும் பாம்பைவளநாடே

21. வீரிசவுரி விமலிதிரிசூலி
மாரிகருணைமுத்து மாரிமகம்மாயி

22. வண்ணமலர்சொரியு மாவின்மயிலாடப்
பண்ணைவளஞ் சிறந்த பாம்பைவளநாடே

23. முத்தாரம்பூண்ட முளரிவயலதனில்
நித்தமுஞ் செந்நெல் நிறைபாம்பை நன்னுடே

24. கோலமயிலினங்கள் கூடிவிளையாடுஞ்
சாலமலர்ப்பொதும்பர் தழைபாம்பை நன்னுடே

25. செந்நெல்விளையுமர சேரிவயலதனில்
அன்னமிருந்து விளையாடுவதுங் கண்டீரோ

26. சின்னமுலைச்சியர்கள் சேர்ந்து நடும்பொழுது
வன்னமுலையில் பள்ளன்மா மோகங்கொண்டானே

27. அத்தைமகளேயென்று மெத்தமனதாகிக்
குத்துமுலைமேனகம் வைத்தானொருபள்ளன்

28. கொங்கை குலுங்கவே கோலக்குழன்மாதர்
கூடியடிக்கப்பள்ளன் கூத்தாடல் கண்டீரோ

29. கூந்தலசைந்தாடக் கொங்கை வடமாடச்
சேர்ந்த உழத்தியர்கள் செய்யிற்குரவைசெய

30. முத்து நகைச்சிமதி முகத்தாள் முலைகளினல்
மெத்தமயக்கப்பயல் மென்கால் பிடித்தானே

31. காலைப்பிடிக்கமெல்லக் கண்டாளவனமுனம்
மாலைப்பொழுதினிலே வாமருவவென்முளே

32. வாலக்குயிலே வரிக்கிளியே தாராவே
மாலைப்பொழுதிலொரு மங்கைவரக்காணீரோ

33. கன்னலினிய கமுகுடன்றே மாவார்ந்த
பன்னரியசோலைசூழ் பாம்பைவளநாடே

34. வீராதிவீரமுள்ள வெற்றிமுர சார்ப்பப்
பாராள் பவர் போற்றும் பாம்பை வளநாடே

35. கல்லூர் நெல்லூரை வென்ற காவலர்கள் தென்பாம்பை
வல்லோர்டணிய நித்தம் வாராளே மாரியம்மை

36. வாதாடும் ஒன்னலர் தம் வாயைக் கிழித்தவர்கள்
மல்லாரி பெற்றவர்களெல்லாருங் காணவே

37. சங்கீதமேளமுடன் குளமிகமுழங்க
மங்கையாடியிப்பொழுது வாருளே மாரியம்மை

38. பில்லியுடனே சிலவாம் பேய்களங்கு விட்டோட
வல்லிமகம்மாயி மாரியம்மை வாருளே

39. சாகமசைந்தாடக் காவலர்கள் கொண்டாட
மாகமலர்சொரிய வாருளே மாரியம்மை

40. செகமேழுமெச்சியிடு தென்பாம்பை நன்னாட்டின்
மகமாரியம்மையவள் வாருள் தெரு வீதி

41. சன்னதங்களாடவே சங்கீதம் பாடவே
மன்னவர்கள் சூழவே வாருளே மாரியம்மை

42. பாராரவ்வா றரசு நான்கு முதலியும்
சீராகவாழுமெங்கள் தென்பாம்மை நன்னாடே

43. சோலைக்கிளிபோல தோகைமயில் போல
வாலக்குயில் போலொரர் மங்கைவரக் காணீரோ

44. கண்டாலுனக்கேது காரியங்களுண்டோதான்
கொண்டகணவனுனைக் கண்டால் பொறுப்பானோ

45. ஆரும்பொறுப்பார்க ளாசைபொதுவல்லோ
வாராரிளமுலையாள் மையல் பொல்லாதல்லோ

46. மாலைகுலையாமல் மஞ்சளழியாமல்
சேலையவிழாமல் சேர்ந்தணைய வாரானோ

47. ஊருமறியாமல் உற்றாரறியாமல்
ஆருமறியாமல் ஆசை தீரவாரானோ

48. அந்திக்கடையிலே சந்தை வெளியிலே
வந்தபயலொருவன் தந்தானொருகாசு

49. ஒரு காசுக்காகவே யூரின்கடை வீதித்
தெருவெல்லாஞ் சென்றுமந்தக்காசு செல்லாதென்றானே

50. காசுக்கடையிலே கண்டாலவனை நான்
காறுபாறுபண்ணியினிக் காசுவிடுவேனோ

51. ஏரிக்கரையிலே யிரையெடுக்குந்தாராவே
என்னாசைக்காரியொரு மின்னாளைக் காணீரோ

52. கொண்டானடிக்கச்சே கண்டாசைகொண்டவன்
பெண்டுபிடிக்கவாற திண்டாட்டங் கண்டீரோ

53. கொங்கைசுமந்த கொடியிடைகள் நோகாமல்
குடமெடுத்துத் தண்ணீர்க்குங் கூடவருவேனோ

54. மாலைப்பொழுதிலே வாடா நீ மச்சானே
வந்தாலிருவரது விந்தையறியலாம்

55. கள்ளிச்செடிக்குளே கைப்பிடித்தவன்றந்த
பணம்வெள்ளிப்பணமானல் விட்டெறிஞ்சு போடேனே

56. மாலைமுடிக்கவோ காலைப்பிடிக்கவோ
மச்சானேயுன்றனது வங்கணமே போதாதோ

57. ஆடு தந்த கோனரோ வீடுதேடி வாறவர்
ஆங்காணுந்தாயாரே நான்காணும் நிற்கிறேன்

58. எட்டிபழுத்தாலென் ஈயாதார் வாழ்ந்தாலென்
செட்டி கனத்தாலும் வட்டி விடுவானே

59. சின்னஞ்சிறுக்கி யொருகன்னங் கறுப்பியார்
செட்டிப்பயலை மெல்லத்தட்டிப் பறிச்சாளே

60. செட்டிப்பயலுமொரு குட்டி கொடுத்தபின்
வட்டி சரியாச்சென்று வாங்காமற் போவானே

61. செந்நெல் வயல் செழித்த தென்பாம்பை நன்னாட்டு
மன்னர் விசயதேவர் வழி வழியாய் வாழியவே

62. மாரிபொழியவே மன்னர் தழைக்கவே
மகமாரியம்மன் மலர்ப்பாதம் நான் மறவேன்

63. ஆதியருளாரும் சோதிதரு பாலன்
வேதவிநாயகன் பாதமறவோமே

64. சாலைக்கரையிலே சோலைக்கிளிகள்போல்
வாலப்பருவமுள்ள மங்கையர்கள் கூடியே

65. கொண்டைசரிந்தாடக் கொங்கைவடமாடக்
கொண்டாடனடிக்கும் பெண்கள் திண்டாட்டங் கண்டீரோ

66. கண்டால் முடியாதே காமனம்பு தாழாதே
வண்டார் குழலியர்கள் மாயவலை பொல்லாதே

67. என்னாளுமாசைதந்த பொன்னாருங் கொங்கையாள்
இந்நாள்வரையுமவளென்னை மறந்தாளே

68. வந்தால் விடுவேனோ மாலைக்குழலியை நான்
எந்தாகந்தீர வெடுத்தணைத்துக் கொள்ளேனோ

முற்றிற்று.